ஜெபத்து அணைக்கும்

4

1/211,88
N20
181034

78

உ

ஸ்ரீ வல்லபை மனோஹரன் துணை.

திருச்சி கலெக்டர் மகா-ா-ா-ஸ்ரீ

# Mr. E.W. ஸ்ரீ துரையவர்களால்

உடையார்பாளையம் தாலூகாவில்
1329-ம் பசலி ஜமாபந்திநடத்திய
தணிக்கைச் சிறப்பென்னும்

# ஜமாபந்தி அலங்காரம்.



OFFICE OF ... 14 JUL ...0 MADR

இஃது

உடையார்பாளையம் தாலூகா அயன் தத்தனூர் வட்டம்
கர்ணம் தளவாய் சுப்பிரமண்ணிய அய்யர்
குமாரன் சாம்பமூர்த்தி அய்யரால்
இயற்றப்பட்டு,
...ப்ரம்மானந்த' அச்சுக்கூட்டத்தில்,
...ப்பிக்கப்பட்டது.

1920.

V211,88
N20.
181034

உ

ஸ்ரீ வல்லபை மநோஹரன் துணை.

திருச்சி கலெக்டர் மகா-ள-ள-ஸ்ரீ

# Mr. E.W. ஸ்ரீ துரையவர்களால்

உடையார்பாளையம் தாலூகாவில்
1329-ம் பசலி ஜமாபந்திநடத்திய
தணிக்கைச் சிறப்பென்னும்

# ஜமாபந்தி அலங்காரம்.



14 JUL 1920
MADRAS.

இஃது

உடையார்பாளையம் தாலூகா அயன் தத்தனூர் வட்டம்
கர்ணம் தளவாய் சுப்பிரமண்ணிய அய்யர்
குமாரன் சாம்பமூர்த்தி அய்யரால்
இயற்றப்பட்டு,

திருவாதி 'பிரம்மானந்த' அச்சுக்கூடத்தில்,
பதிப்பிக்கப்பட்டது.

1920.

18/8/34
1431

# விளம்பரம்.

இதனால் சகலமான நண்பர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:—

திருச்சினுப்பள்ளி டிஸ்டிரிக்ட்டு கலெக்டர் மகா-ஸ்ரீ மிஸ்டர் E. W. லீ. துரையவர்கள் 1920ளு (1329)-ம் பசலி ஜமாபந்தியில் செய்த நன்மையும் அதில் நேமித்து வந்த உத்தியோகஸ்தர்களின் தன்மையும் கர்ணன்களுக் கேற்பட்ட நன்மையும் என் புல்லறிவுக் கெட்டியவறை சில கணக்கு சங்கதிகளை வேடிக்கையாக பலவித சந்தங்களுடன் இதில் எழுதியிருக்கிறேன். அதில் ஏதேனும் குற்றமிருந்த போதிலும் மன்னித்து குணத்தை மட்டும் அங்கீகரிக்க வேணுமாய்க் கோருகிறேன்.

ஜமாபந்தி ஆபீஸ்
அரியலூர்
25—5—1920.

சாம்பமூர்த்தி.
தளவாய் அக்கிரகாரம்.

OFFICE OF ... 14 JUL 1920 MADRAS

# விநாயகர் துதி.

அருசீர்.

பெருமை மிகுந் திருச்சி நகர் கலெக்டராம்
E. W. லீ துரையின் ஜமா பந்திப் பெருமை தன்னை

மருவு பெருஞ் சரிதமதை மனமகிழ்ந்து பாடவும்
யான் மா நிலத்தில்

181034

உரிமை பெறச் செந்தமிழா லுகந்துரைக்க
ஓங் காரத் துள்ளாய் நின்ற
கரி முகத் தெம் பெருமானைக் காலையினும்
மாலையினும் கருதி வாழ்வாம். (1)

## ஜமாபந்தி ஆபீசர்களின் தன்மையைப் பற்றியது.

பாண்டு மேட்டு.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மேல்
இருபதாம் வருஷத்தினில்
பார்புகழும் லீ. துரைவாள்
பரிந்து வந்தார் ஜமாபந்திக்கு (1)

வந்தவுடன் முதல் கேம்பு
வாகாய் கீழப்பழுவூர் தன்னில்
வாசமுடன் ஜமாபந்தியை
விமரிசையாய் செய்த பின்னே. (2)

சீர் பெருகும் திருச்சி நகர்
சீலன் ராமலிங்க அய்யர்
பேர் பெருகும் ஹெட் சிரஸ்தார்
பிரியமா யெட் கிளர்க்குடனே (3)

சொந்த மென யாவரையும்
சிந்தை தனில் நன் குணர்ந்து
வந்து நன்ருய் தணிக்கை பார்க்கும்
வண்மையை யா னென்ன சொல்வேன் (4)

ஓவியற் கெழுத வொண்ணு
உருவத்தை உடைய நல்ல
நண்பரை ஆதரிக்கும்
அன்பன் வைத்தியனுதன். (5)

சீலமுடன் ஜமாபந்தி கிளார்க்
தெரிய வேண்டுமோ வுமக்கு
ஞாலம் புகழ் நண்பர்களே
யானுரைப்பேன் அவர்மகிமை. (6)

நிதானம் பொருமையுடன்
நீ ணிலத்தில் புகழ்பெருக
பல்வரையும் தணிக்கை நன்ருய்
பார்க்குரார் பார் பெருமையிலான். (7)

வாச மிகும் காவிரி சூழ்
வள்ளல் திரு ரெங்கேசன் வாழ்
தேசம் ரொம்ப தூரமப்பா
T. M. வைத்தியனுதன். (8)

செட்டில் மெண்டு இனும் வேலே
சீர் திருத்திப் பார்க்குரார் பார்
வெகு மேட்டிமையன்
ஜி. கிருஷ்ண சாமியெனும் வல்லவனும். (9)

ஆப்த மிகும் ஆப்காரி கிளார்க்
அமரிக்கை யுடையோன் சொன்னேன்
அந்த ரங்கமான தோர் என்
சீனிவாச ராகவனும். (10)

திட்டமதாய் ஸ்டாம்புகளை
வட்ட திட்டம் பார்த்து நன்ருய்
சட்டமுட னெழுதிவைக்கும்
இஷ்டன் T. V. சுப்பிரமண்யன் (11)

ஞாலம் புகழ் திருச்சிக்கெல்லாம்
நாடிய அப்பாயிண் மெண்டை
சீலமுட னெழுதி வைக்க ஜீ.
பால கிருஷ்ணய்யராம். (12)

இரிகேஷன் கிளார்க் கொருவர்
L. S. சுப்பிரமண்ய அய்யர்
குறி பெருங் கண்ணுளராய்
கிஸ்த்து வசூல் பார்க்குரார் பார் (13)

மற்று மொரு சுப்பிறமண்யன்
மகிழ்ந்து Check பார்க்குரார் பார்
சற்றும் தவருத நண்பர்
ஜமாபந்தி கிளார்க் அசிஸ்டெண்ட். (14)

டிராப்ட் மென் என்னுமொரு
தீரன் சிறு பிள்ளை பாரு
எற்றிசையும் புகழும் நல்ல
M. S. விஸ்வனு தய்யராம் (15)

வான்புகழ் பூரணியின்
வாக்குதவி வந்தவராம்
நான்புகழ்வேன் சீக்கிரத்தில்
நல்லஸ்திதி மான்சிங் B. A. (16)

கியாதியாய் கலெக்டருடன்
கேம்பு கிளார்க்காய் வந்திருக்கும்
கீர்த்தி மிகும் முருகேசன்
கியாதியும் விஸ்தாரம் சொன்னேன். (17)

விரசமில்லாமல் நன்றாய்
வேணபடி சமையல் செய்யும்
நரசிம்மன் சுப்பராயன்
நாணயமாய் இருவர் பின்னே. (18)

பூசுலவெலாம் புகழும்
புண்ணியரே தங்கள் மீது
விசுவாசமுடன் கவியுறைத்தேன்
தாசன் சாம்பமூர்த்தியும் யான். (19)

## வசனம். மகா-ஸ்ரீ உசூர் சிரஸ்த்தாரவர்கள் தன்மையைப் பற்றி வியந்து பாடியது.

### அருசீர்.

சீர்பூத்த வெள்ளிவறை தனிக்கருணை
யெம்பெருமான் திகழ் முக்கண்ணன்
ஏர்பூத்த பதிவிடுத்து பதிபுனைந்த
செஞ்சடையுமிடப்பான் மேவும்
வார்பூத்த பசுங்கொடியு மழு மானும்
மால்விடையு மரையச் செய்து
கார்பூத்த பூதலத்திற் றிருவுருக்கொள்
ராமலிங்க நின் கழல்கள் போற்றி. (1)

குணங்கடந்த கருணீகர்க் கணிதமெனும்
பேரிருளிவ் வுலகெலாங் கொண்டு சூழப்
பணங்கிடந் தத்திருமேனிச் சிவபெருமாற்
கருள் சுரந்திப் பாறிற் றோன்றி
மணமடைந்த வறு நான்கு கணிதமெனுஞ்
செங்கதி ரோன்றனைநாட்டி யிருளை யோட்டி
கணமடைந்த விண்ணவரு மண்ணவரும்
புகழ்குருநின் கழல்கள் போற்றி. (2)

மாமேவு வசனமலர்த் தவிசுறையும் புத்தேணுன் மறைவலோ
ன்றன்
நாமேவு தவளமலர்க் கலைமடந்தை வாணியையும் நாணச்செய்
அ
பாமேவு மம்மனையைத் தன்வயமாய்க் கொண்டவருட்பய னீ
தென்றே
காமேவு வாவைருந் துதிக்குந்திரு ராமலிங்கன் கழல்கள் போ
ற்றி. (3)

இப்புவனஞ் செய்தவமோ விவணுறையுமாந்தர் புரித்தவத்தின்
கூறோ
செப்பறிய சீர்த்தியுறு இத்தலஞ்செய் மெய்த்தவமோ சிறிய
னுயேன்
எப்பிறவி தனிற்புரிந்த வருந்தவத்தின் விளைவோ மற்றெது
வோ தேரேன்
அப்பனல் மண் கால் வெளியாய்மைந்த சிவமிங்கெழுந்த வரு
ட் பேரம்மா. (4)

பன்மையெனும் பிரஜைகளெல்லாந் தொழுதேத்தும் பரசிவன்
றன் பாண்மை தோன்றச்
சென்மமெடுத் திவனடைந்த தனிப்பெருமை இராமலிங்க வித்
தமியேன் பாபக்
கன்மமெலாந் துடைத்தருளி இகபரத்தினின்பமெல்லாம் கரை
கண்டுய்ய
நன்மையுறக் கடைக்கணித்தல் வேண்டினன்யான் அவ்வாறு
அருள் நல்குவாயே. (5)

## வசனம்.

**லோயர் அணைக்கட்டு முகாமில் பணம் கொடுத்தாலும் சாப்பாடு கிடைப்பது கஷ்டமாயிருந்த காலத்தில் பாடியது.**

**சல்லாப சுந்திரனே என்ற மெட்டு.**

சல்லாப நண்பர்களே
சகியோமே இந்தப்பாடு
கல்லைக்காய்ச்சி குடிக்கும்கதை
கணக்கருக்கே ஏற்றதாச்சே. (1)

லோயர் அணைக்கட்டில் வந்து
சோருமில்லா மலிருந்து
ஊரையும் நாம் விட்டு வந்து
யாரும் தெரியாம லிங்கு (2)

எல்லோரும் ஒன்றுகூடி
எழுந்துதாசில்தார் முன்னாடி
பல்வகைத்துயருஞ் சொல்லி
பார்ப்போம்வாரீர் நண்பர்களே. (3)

நன்னெறியுமடக்க மூடன்
நியாயவாதி யானதினால்
பின்னையொன்றுஞ் சொல்லமாட்டார்
பிரபரேஷன்செய்வா சொன்னேன். (4)

தன்எஸ்டாபிலிஷ் மெண்டுக்கும்
தானேநன்கொடை கொடுத்து
அன்னமிடச்சொல்லி நன்றாய்
ஆதரித்தார் நண்பர்களே. (5)

தன்னரசுக்குள்ள வரைத்
தாடைக்கித் தனக்குள்ளாக
மேன்மைபெரும் மன்னவனே
மெத்தக்கொண்டாடிச் சொல்வேன் (6)

நிழலறுமை வெயிலதனில்
போனாலல்லவோ தெரியும்
நீணிலத்தோர்சொல்லும் வார்த்தை
மா நிலத்திற்றெரியும் சொன்னேன். (7)

கல்லுருகும் புல்லுருகும்
கனத்த நல்ல துரும்புருகும்
அன்புருகச்செய்து வேலை
வாங்குமதிசேஷன் சொன்னேன். (8)

காருண்யத்தில் மினைவுடையார்
கற்றவரின் நட்புடையார்
யாருதியின்பல முடையார்
மாளிலத்திற்புகழ்ச்சி கொள்வார் (9)

எடுத்துரைக்க எந்தன்நாவும்
துடிதுடிக்குதென்ன செய்வேன்
பசித்துயரம் பொருக்காமலே
பாடினேன்யான் சாம்பமூர்த்தி (10)

## வசனம்.

லோயர் அணைக்கட்டை விட்டு ஜயங்கொண்டம் வந்து தாலூக்கா செக்செய்துகொண்ட கணக்குகளைப்பற்றியெழுதிய கும்மி.

ஷண்முகனைக்காணமலே மனம் வாடுது (என்ற மெட்டு).

ஜல சௌக்கியமுள அணைக்கரை ஐந்து நாள்
ஜடிதியிற் போவோம் யாம் ஜயங்கொண்டமே. (1)

தாலூக்கா தணிக்கையிற் கணக்கென்ன தேவையோ
தர்மதுரை தாசில்தார் தணிக்கைகள் நேர்மையோ (2)

முந்திசெட்டில்மெண்டு ரிஜிஸ்டரின்மாறுதல்
முக்கியமான தற்காஸ்துகள் யாவும் (3)

பிந்தியமாறுதல் B ரிஜிஸ்தர்இனும்
பிழையில்லாமலெழுதி அழகுடனே. (4)

ஒண்ணு ஒண்ணு ஏ கணக்குடன் அடங்கலும்
ரெண்டு ஏ ரெண்டு சி மூணும் தணிக்கை. (5)

பண்ணியேபின்னும் பரிவுடன்தர்காஸ்தை
பாங்கானமனைகளின் தற்காஸ்துடனும். (6)

முக்கியமானதோர் கணக்குகள் பார்சொன்னேன்
முற்றிலும் 5 நிம்பர் செக்ஷன்மூன்றும். (7)

பத்துதலாய்பார்நீர் பார்த்தாராம்நம்பரை
சுத்தமுடநத்தியனன் சத்தியுடனே. (8)

மற்றும்சில்லரைஎல்லாம் மனதிற்கினிமையாய்
குற்றமில்லாமல் நன்றாய்க்குறித்தெழுதி (9)

ஏழாம்நம்பர் மிஸ்லேனிஸ்குறிப்பாம்
பட்டாநிலம்நீங்கலாக மற்றும்பூராவும். (10)

எட்டாம்நம்பர் இரிகேஷன் கணக்குச் சொன்னேன்பாரு
சட்டமுடனுசராவின் மொத்தநிலமாம். (11)

ஒன்பதாநம்பர் செஸ்விபரம்சொல்வேன்
ஏழாம்நம்பரில்க் கண்டதற்குகாப்பிதான். (12)

செஸ்வரிஎன்பதுஎன்ன என்நண்பரே
தெரியச்சொல்லும்கொஞ்சம் கவிபாடுமென்பரே. (13)

ரோட்டினிற்போகவும் ரெயில்தனில்போகவும்
ரூபாய்க்குஒண்ணே காலணுவிதமாம். (14)

தாட்டீகமாகவே கொடுத்துவந்தார்பின்னும்
அட்டியில்லாம் ரெயில்ரோட்டும்நில்லக்கும். (15)

பார்ட்ஒண்ணுவது சிட்டாபத்தாநம்பர்
பட்டாநம்பர்வாரியாய் மொத்தநிலமாம். (16)

பார்ட்டுரெண்டாவது பகரும்விவரம்யாது
ரயித்துவாரியாகவே மொத்தபேரீஜாம். (17)

11 நெம்பர்பட்டா நகலுணுபாருதிட்டமாய்
ஒன்றிரண்டுசிட்டா நகல்தான். (18)

ஜாஸ்த்திகம்மிகண்டு ஜடிதியிலெழுதுங்கள்
வாஸ்த்தவம்வம்புவீண் பேசாதீர்சொன்னேன். (19)

18103

கருத்தாயெழுதி கொஞ்சம் கைதனிலிருந்தக்கால்
கிராமத்தில்கனவான் ஏதேனும்தருவான். (20)

12 நம்பர்ஜமாபந்தி கோஷ்பாரா
பார்கிராம பேரீஜூமோர்வரியிலடக்கம். (21)

N21,88 N70

## கும்மி தொடர்ச்சி.

### வேறு.

இந்தவிதம் சொல்லலும்மே கர்ணன்கள் எல்லாம்
எடுத்துப் புறப்பட்டார்கள் தாலூக்காவிற்கு. (22)

போனவுடன் விரண்டாவில் விஜயரையொத்த
ஜய விஜயரையொத்த பிர்க்கா இன்ஸ்பெக்டர்கள் தணிக்
கையும் பார்த்து. (23)

பார்த்துபின்னுமதை சீர்திருத்தி
நேர்த்தியாய் ரிகார்டுகளை வரிசைகள்பண்ணி. (24)

பண்புடன் பாரெஸ்டு குமாஸ்தாவை நாடி
பகரும் திருவரங்க சாமியைத்தேடி. (25)

வெட்டுப்பட்ட மரக்கிறையம் தர்காஸ்துக்கிறையம்
வேணபடி யொத்துப்பார்த்துக்கை எழுத்தாகி (26)

தர்காஸ்த்து தணிகைகள் பார்ப்பது சொன்னேன் நன்றாய்ப்
பார்ப்பது சொன்னேன்
திருஞான சப்பந்தம் பிள்ளை யொருவர். (27)

பலரும் புகழு மனே தர்காஸ்த்துப் பார்க்க மனே தர்காஸ்த்துப்
பார்க்க
பாலகனும் V. இராகவேந்திர ராவாம் (28)

பட்டா மாறுதலுக்குத் திட்டமுடனே
பாருங்கள் ரெத்தினம் பிள்ளையை நாடி (29)

பார்க்க முடியாவிட்டால் ஜீ. சுப்பிரமண்ணியன்
பார்த்துத்தருவர் கொஞ்சம் சீக்கிரம் சொன்னேன். (30)

சிட்டா அடங்கலுடன் ஒத்துமை பார்த்து
சீர்திருத்தி சர்ட்டிபிகேட் டெழுதிக்கொண்டு (31)

வெற்றி புகழ்வேணு கோபாலனை நாடி
வேணபடி ஜெனரல் செக் பார்த்துக் கொண்டு (32)

மற்றுமொரு ஹெட்குமாஸ்தா தன்னையே நாடி
மகிழ்பெருகு சோமசுந்திரத்தையும் பாடி. (33)

வசூல் பாக்கி பார்ப்பது வாகுடன் சொன்னேன்
வண்மை பெரும் அருணாசலத்தையும் நாடி. (34)

சுத்த முடனத்திய னன்சத்தியுடனே
சுத்தமாய் எழுதுவார் சித்தமும்சொன்னேன். (35)

பத்தியாய்பதினாராம் நம்பர் கணக்கை
பார்த்துநன்றாய் ஒத்துககொள்வோம் பரிவுடன் பின்னே. (36)

இவரைப்போல் மேட்டிமையன் யாருமேயில்லை
எல்லா ரிஜிஸ்டரும்பார் கண்ணாடிபோலே. (37)

கற்கணக்கு பதிவது கண்ணய்யங்கார்
தற்பரனும் அற்புதன் மாதவன் வகுப்பாம். (38)

பார்ததுவரிசைபண்ணி எடுத்துக்கொண்டு
தர்மதுரை தாசில்தார் சமுகமே நாடி. (39)

சவால்பட்டி உத்திரவு பேப்பர்கள் எல்லாம்
ஜடிதியில் கணக்கெல்லாம் கைஎழுத்தாகி (40)

சேவகன்ஒருவன் பின்னேகௌரவமாக கொஞ்சம்கௌ
ரவகுமாக
சேர்ந்தார்போல் உசூர் தன்னில் கொண்டுவிடவே. (41)

## வசனம்.

### உசூரில்கொண்டுபோய்விட்டவுடன் பாடியதுகும்மிதொடர்ச்சி

(ராகம் வேறு.)

கொண்டு விட்டவுடன் கண்டுகொள்வீர் சொன்னேன்
கோலமிகும் ஞாலக் கர்ணன்களே
தண்டமிழ் பிரியனும் வைத்தியனாத
சுவாமிக் குகந்து தமிழ்ப்பாட (1)

காணடியே கண்ணாற் காணடியே யவர்
கம்பீரமான திருமுகத்தை
கண்டு தெரிசித்தால் கர்மவினையாவும்
காற்றிற் பறப்பது போற் பறக்கும். (2)

இல்லாற் கிறங்கிடும் இங்கித குணமும்
வல்லாற் குதவிடும் வாழ்நாளும் இவை
எல்லாமுன் செய்த நற்பயனாருளென்றி
யற்றிக் கும்மியடியுங்கடி (3)

விந்தையாய் அந்தணர் சிந்தை மகிழ்ந்திட
விப்பிர குலத்தினில் வந்துதித்து
சுந்திரமாகவே ஆட்சி செய்து வரும்
தந்திரமென் சொல்வேன் சகிமானே. (4)

அகத்தினழகு முகத்திற் றெறியுமென்
றௌவையர் சொன்னதும் பொய்யாமோ
இகத்தின் பரத்தின் இன்ப மிரண்டையும்
ஈவேனென்றது போல்த் தோன்றுதம்மா. (5)

ஜெனறல் செக்ஷர் குமாஸ்தா பார்த்த பின்னே
சீக்கிரமாய் வசூல் பாக்கி தன்னை
ஜாக்கிர தையுடன் தணிக்கை பார்த்திட
எல், யெஸ். சுப்பிரமணிய னொருவர் (6)

எல்லோரும் தணிக்கை பார்த்துப் பின்னும் நன்று
பிசைந்த ஜமாபந்தி கிளார்க்கிடம் போய்
சொன்னபடியே கணக்கெலாம் சோதித்து
சுகமாய் நண்பர்கள் மெச்சும் வண்ணம். (7)

சோதித்த கணக்கின் சுபாவத்தைக் கண்டு
சூட்சியாய்ப் பார்த்துமே நோட் டெழுதி
முக்கியமான தோர் பாபத்து யாவையும்
முயற்ச்சியாய்க் கொஞ்சம் பார்த்திடுவார் (8)

தென்னுடா ரண்ணிம் தெக்கிணத்திலகும்
சீர்பெரும் சுவேத நதி வலப்பார்
தார்பெரும் தளவாய் சாம்ப மூர்த்திகவி
சாற்றினேன் கொஞ்சம் க்ஷமித்திடுவீர். (9)

வசனம்.

மகா-ா-ாஸ்ரீ உசூர். சிரஸ்த்தாரவர்களிடம் கையெழுத்து வாங்க தன்னுடனிருந்த கர்ணங்களையும் சீக்கிரம் வரும்படி பாடியது.

விருத்தம்

சீரேறு மிசைபாடித் திரு ராமலிங்கய்யர் முன்னேசெல்ல
நேரேபோய்ப் பார்ப்பதற்கு நேராமல் நின்றார் சில்லோர்
காரேரும் புவியதனிற் கணக்கெழுதும் கணக்கரையும் கையைக்காட்டி
நேரே நீர் வா வெனவும் யாவரையும் பார்த்திட்டு நிகழ்த் துவேனே. (1)

ராகம் (அங்குச தோணி.)

சற்றே நடந்து வாருமையா
செக்மிமோவுடன் சிரஸ்த்தாரிடம் சற்றே நடந்து
நற்றவம் புரிந்த பயனதால் நாம்
திரு ராமலிங்கய்யர் வந்திருக்கிறார். (1)

ஜாதி முறைமையிற் பெரியோன்
சகலரும் புகழ்ந்தேத்தும் குறியோன்
கோதிலாத குணமுடையோன்
கோபம் கொண்டால் தாளமாட்டோம். (2)

வேதகுலத்திற் றேன்றினுறிவர்
வெகு நியாயஸ்தலத்தில் ஆழ்ந்தினர்
பூதலத்தில் இவரைப் போலே
புண்ய புருஷர்யாரு மேயில்லே. (3)

சித்தங்குறையில் நமது வேலே
சீக்கிரமாகாது சொன்னேன் நீ
பத்திமலிந்து பாடும் சாம்ப
மூர்த்தியுடன் கூடவே கொஞ்சம் (சற்றேநடந்து) (4)

## வசனம்.

மகா-ா-ா-ஸ்ரீ சிரஸ்தாரிடம் செக்மிமோவை
கொடுத்து வணங்குதல்.

## விருத்தம்.

மாமறைத்தலைவா போற்றி மறைகுலச்சுடரே போற்றி
காமரிந்திரன் முன்னோர்கள் காண்பதற்கரியாய் போற்றி.
தாமரைக்கண்ணு போற்றி திருராமலிங்கா போற்றி
தோமறு செல்வம் வாய்ந்த துரைகட்குமருகா போற்றி.

என்றதுமுவகை விம்மவெழின் முகமலர்ச்சி காட்ட
பொன்றவிற் கருணைபொங்கிப் பொழிதர விரைவினிற்சென்
றின்று நம்வாயில்வந்த இருமிலக் கர்ணன்யாவும்
மன்றவிங்கழைப்பீரென்று வாய்மலர்ந்தருளினனே.

## வசனம்.

சிரஸ்த்தார் சோதனையாகி துறையவர்களிடம் தணிக்கைக்கு கர்ணங்கள் பயத்துடன் செல்லும்போது துரையவர்க

ளின் காருண்ணிய குணவிசேஷத்தை சொல்லி கடவுளையும் பிரார்த்திக்கும்படித் தேற்றுதல்.

### என்னை நீர் கைவிடில் என்ற மெட்டு.

* என்னையேன் வேண்டுவீர் என்செய்வேன் யான்நண்பர்
பொன்செய்த மேனியோன் புதல்வனைப் போற்றுங்கள். (1)

ஆகுவினிலேறி அசைந்துவரு மெந்தன்
ஐங்கரனைப்போற்ற பயங்கரமேயில்லை. (2)

புள்ளிமயிலேறித் துள்ளிவருமெந்தன்
வள்ளிபாகன் றன்னை வாகுடன் போற்றுங்கள். (3)

துடையிலுமையாளும் செஞ்சடையிற் கங்கையாளும்
விடையிலேறிவரும் வேதனைப் போற்றுங்கள். (4)

இகழ்கருடன் மீது எரிவிளையாடும்
புகழ்நாராயணன்றன் பொற்பதமே துணை. (5)

E W லீ யு மென்றைக்குமே நல்லோன்
ஹெட்கிளாஸ்தாரும் எவர்க்குமுபகாரன். (6)

மாசிலாகுணத்தோன் தாசில் சேஷ அய்யர்
ஆசி கூறிச்சொல்வேன் அன்பன் வைத்திநாதன் (7)

மற்றுமுள்ளோர் யாரும் கற்றுணர்ந்த நல்லோர்
பற்றுதலும் நட்பும் பார்த்தால்த் தெரியாதோ (8)

அருண்மிகப்படைத்த அந்தணரானதாலே
பொருள் மிகப்புடைத்தோர் போற்றுஞ் சிறப்புற்றார் (9)

இருண்மிகப்படைத்தோர் இன்ன வாரியம்ப
இவர்க்குத் தேற்றிக்கவி சொன்னேன் சாம்பமூர்த்தி (10)

* முதல் வரியை பலிக்கி பலிக்கி மூன்றுதடவை சொல்லியும அடுத்தவரியை நாலாந்தடவையாக ஸ்தாகியில்சொல்லவும்.

## துரையவர்களிடம் தணிக்கைக்குப் போவதும் தணிக்கை விசேஷத்தைப்பற்றி பாடியது

### நொண்டிச் சிந்து.

1 முதல் 1 எயும், உள்ளபடி கோஷ்பாரா போட்டபாகமும்
ரெண்டு ரெண்டேயுடனும், தரிசு, கைப்பற்றுசாகுபடி
புறம் போக்கும், 2 C கணக்குடனும், சேர்த்து,
அடங்கலின் நெம்பர்வாரி மொத்த மரமும்
2 D நீர்ப்பாய்ந்த பயிரும், அப்படியே 6 நம்பர்
மொத்த நிலமும், 5 நம்பர் வஜாக்கணக்கும்,
நஞ்சை, சாகுபடி தரிசு விவறங்களும், அடங்கல்
ஷராவுடனும், அஜிமாஷ், விவரமும் சீர் திருத்தி,
நோட்டு மெழுதி, கிருமங்கள் மொத்தவகையை,
ஒத்துப்பார்த்து கையெழுத்துப் போட்டு மனுப்பி,
கர்ணன்கள் யாவரையும், பிரியாமல் தறியாமல்
அழைத்துக்கொண்டு, தாசில்தாருடன் கூடி,
கொஞ்சம், சல்லாபமாகவே உல்லாசமாய்,
ஜமாபந்தி கிளார்க்குடனும், துரைகள் திருமுகம்
பார்த்துமே சமுகத்தில், புரப்படும் நேர்த்தி
யென்னே, யென்னே யென்னே புரப்படும கீர்த்தி
யென்னே, புறப்பட்டுப் போவதைப்பார்த்துச் சொன்னேன்,
போனவுடன் சீட்டுக்கொடுக்க,
புகழ், பெருகும் வீ. துரையும், லிஸ்டை எடுக்க
கிராமங்கள் வரிசையாக, கூப்பிட்டுக்குடிகளைக் கேட்டுக்கொ
கொண்டு,
நியாயங்கள் செய்குறார் பாரு,
நல்ல நல்ல நியாயங்கள் செய்குறார்பாரு,
தயவுள்ள வீ. துரையே, நன்றாய், தருமதுரைகளென்று ஜன
ங்களெல்லாம்,
கொண்டாடும் நேர்த்தியைப்பாரும்,

வந்தவர்க்கு உபகாரம், இல்லாமற்போவதில்லை
சொன்னேனிது, சவிஸ்தாரம்
கர்ணன் நிற்குமிடந்தூரம், இவரைப், பார்த்திட்டால் லெட்சண முகவிசாலம்,
எல்லோரு மொன்றுகூடி, துரைகளை, நல்ல நல்லனென்று சொல்லி மங்களம்பாடி,
நாடிக்கொண்டாடுரார் பார்,
புண்ணியத்தில் நினைவு சொன்னேன்
பின்னும், வீ. துரைக்கு, கண்ணியத்தில், நினைவு சொன்னேன்,
போற்றும், அந்தணரிடமும் நல்ல கனிவு சொன்னேன்,
சாத்திரமறிந்த துரை, இவர், சாத்திரமறிந்ததுரை
தாசன் சாம்பமூர்த்தி புகழ மகிழ்ந்த துரை.

## பொது விருத்தம்.

இப்படியாகத்தானே எல்லோரும் ஒன்றுகூடி தங்கள்
சொற்படி செய்தோமையா சோதினை தப்பிலந்தோம்
குற்றமும் ஒன்றுமில்லை குணங்களும் விசேஷமய்யா
மற்றதோர் கணிதம் தீட்டிமறுபடி பட்டாவாமே.
தீட்டியே கணிதமெல்லாம் செறிந்திடும் அரியலூரில்
மேட்டிமையாக ஈசன் மென்மலர்பதம் பூசிக்கும்
தாட்டீகமான ராமலிங்கய்யர் பக்கற் சென்று
கூட்டமாய்க் கர்ணன் யாவும் கூடவேநிற்கின்றாரே.

சில கர்ணன்கள் அவசரமாய் தயாரித்துவந்த கணக்கின் பிசகுகள் உரூரில் அகப்பட்டமையால் எப்போதும் பிசகு சோதனை ஆபீசருக்கு முன்னிற்குமாகையால் சரிவர எழுதி வரும்பொருட்டுப் பாடியது.

## ஓரடிச்சீர்.

ஐயா, மெத்தக்கடினம் உமக்குச் சொல்ல, ஐயாமெத்தக்கடினம்

பொய்யாத ராமலிங்க அய்யரைக்கண்டுவர
நையாத கர்ணன்கட்கு உய்யாது கண்டுகொள்ள.
எல்லாக் கணக்கர்களும் நன்ருகக் கூடிக்கொண்டீர்
பொல்லாதவரேயானல் இல்லாதே என்று சொல்லி
தன்நீதி சேவுகரை விட்டோட்டுவார்
மானமோட்டுவார் மேலாட்டுவார் வழிகாட்டுவார்.
இங்கே மாருபிமானத்துடன் தானகி வந்தவற்குக்
சேனதிபதிபோலே பேசுவார்
அப்போபாருமே கட்டிக்காருமே
உள்ளே சேருமே அது போதுமே.
மற்றக்கணக்கெல்லாற்றையும் மடித்து எடுத்துக்கொண்டு
உண்டு களைப்பாரிக்கொண்டு வாருமே
பின்பு நில்லுமே இதம் சொல்லுமே
நானும் சொல்லுவேன் யாதும் வெல்லுமே.
பின் நெட்டாங்கு பண்ணினக்கால்
முட்டாளுத்தன மாக்சே
கிட்டாது கிட்டிவர வொட்டாது எட்டிமிமோ
பாயுமே மனம் நோகுமே இது போதுமே.
உளம் வாடுமே வேத
மந்திரத்திலே போட்டு யெந்திரத்திலே பார்க்கும்
தந்திரத்திலேயு மில்லை அந்திரத்திலேயே சிந்தை
தானுமே மனம் தோணுமே பிழை காணுமே.
*முப்புரத்திலேயும் நன்ருய் துப்புறவாய் பார்த்துக்கொண்டு
அப்பாலிங்கு வந்தவற்கு இப்பார்வை கிடையாது
அரைக்ஷணம் கையெழுத்து போடுவார் நண்பர் கூடுவார்
இசைபாடுவார் தாளம் போடுவார்.
இதைக்கண்டாருங் கிடையாது
விண்டாரும் சொன்னதில்லை
தண்டமிழைக் கேட்பதற்கு
ஒன்ருக வந்திருப்பீர் அல்லவோ

யானும் சொல்லவோ அங்கே செல்லவோ.
நேரமாகு தல்லவோ.
சாம்ப மூர்த்தி பதம் பாடி
சற்குணமாய் ஜமாபந்தி
வேலையில் வைத் தாசையாலே
மோசம் போகா தீரென்று
தோத்திரம் நன்றாய்த்தோத்திரம்
ராமலிங்கம் ஞானபாத்திரன் ஐயா.

*முப்புரம் என்பது இச்சந்தர்ப்பத்தில் கர்ணன்கள் பார்வை 1. ரிவினியூ இன்ஸ்பெக்டர வர்கள் பார்வை 2. தாலூகா ஆபீஸ் பார்வை 3.

(ஐயா முருகேசா என்ற மெட்டு).

ராமலிங்க பூபன் யான்புகழ் விஸ்வாசன்
இங்கிருந்து எங்களையே என்னாளுமே யாள்கவேண்டி
எங்கும் பிரகாசிக்கும் நரசிங்க உருவைப்போற்றுகிறோம்.
சீர்பெருகும் அரியலூரில் சிறந்த மேலவீதி தன்னில்
தார்பெருகும் சத்திரத்தில் தனியாயாபீஸ் செய்வதுயார்
(ராமலிங்க பூபன்). (1)

காண்பதற்கென்னாளுங் காட்சி கருத்துடனே கவிகளெல்லாம்
மாண்பெறவே மானிலத்தில் மகிழ்ந்துரைத்தாரைச்சொல்வாய்
(ராமலிங்க பூபன்). (2)

தாய்தந்தை போலுடையார் தன்மையுளமனையுடையார்
மைந்தர்களின் நலமுடையார் மானிலத்திற்புகழ்ச்சிகொள்வார்
(ராமலிங்க பூபன்). (3)

இன்னுமிவர்க்குப் பெரியவேலை இருக்குதுபார் அருகிற் சொன்னேன்
என்ஜய கணேசன் சாக்ஷி இத்தலத்திற்காரு காக்ஷி
(ராமலிங்க பூபன்). (4)

## வேறு. (கும்மி).

நண்ணயமாய் ஜமாபந்தி நடந்தேறிற்றே
நாலு கேம்பி லேயும் நன்ருய்த் தணிக்கை யாச்சுதே.
வந்தவரை உபசரித்து வண்மைபெற்றிட நன்ருய்
வண்மை பெற்றிட வகையுடன் நகைமுகமே கொண்டாரடி.
கஸ்பா பிர்க்காவுடன் அழகாபுரம் சுலப்பாக
தாதம்பேட்டை கேம்பில் மூவரும்
கீர்த்தியாக கீழப்பழூர் கேம்புதன்னில்
நல்ல கேம்பு தன்னில் திருப்தியாய் உபசரித்தார் திருக்குணத்தாரும்.
மற்றுமொரு கீழப்பழூர் செந்துறை பிர்க்கா
மணமதாய் உபசரித்தார் வந்த நண்பரை
எங்கெங்கும் கீர்த்திகொள்ள எண்ணமே கொண்டார் நல்ல
எண்ணமே கொண்டார் தங்கமான வெங்கிட்டரமணவல்லனும்.
சீர்பெரும் நிவாநதியின் தென்கறை வாழும்
தார்பெரும் தளவாய் சாம்ப மூர்த்தி பாடலே
பேர்பெரும் பெரியோர்களும் படித்தோர்களும்
பிழை பொருத்தே மகிழ்வுரைத்தே மன்னிக்கவேண்டும்

## ஜமாபந்தி தேவாரம்.

சீர்பூத்த செங்கமலத் தடம்பணைசூழ்த்திருவுலகிற் செங்கோர்கொண்டு, சிறப்புடனே பணிபார்க்கும் நண்பார்கேளீர். ஜமாபந்திச் சிறப்பதனில் கணக்கெழுதும் வகையும், பின்னும் சன்மார்க்கமுள வமைச்சரையும் அவர் குணத்தின் நட்பும், சாதகமாய்க் கருணீகர் பிழைப்புக்குக் காலுஞ்சொன்னேன். கபடநாடக உலகின் கதையைச் சொல்வேன், கருத்துரையும் படியாக என்னிருள் மனதிற்கெட்டியதை கலியுகத்தில் வேண்டுபவை இவை யிவை யென்றியம்புவமே

...பொருளுளனென்று யாரும் புகலுமோர் வார்த்தை வே
...ம், புண்ணிய மிகுஞ் சந்தோஷத்துடனே திரேகத்,
திடம் வேண்டும் போய்வரவும், புனிதமுளோர் ஊர்திவே
ண்டும். பொன் வேண்டும். பூதலத்தில் உதார குணதயை
யும் வேண்டும். கொடை வேண்டும். நன்னடையுடனே, நட்
பும் நாவதனில் மெய்யும், நடமாடிககொண்டிருத்தல் வேண்
டும் நம்மின் மேலோரிடத்தே மியாயமுடன் கீழ்ப்படிந்தொ
ழுகல் வேண்டும், தம்மின் மெலியோர்க்கெல்லாம், நல்லனெ
னும் பெயர் வேண்டும், பேசுதலிற் கியாதியுடன் கீர்த்தி வே
ண்டும், கூர்மையுள புத்திவேணடும், நாமுழைக்கும் உழை
ப்பதனில் நல்லூக்கம் வேண்டும், நன்றாய்ச்சொல்வேன் எவர்
நம்மைத் தூற்றினும் போற்றினும் பொருமை வேண்டும், யார்
க்கும் தீங்குசெங்குணமிலா திருத்தல் வேண்டும், இக்குணங்
கள் இருந்தால் மட்டும், கௌரவமாய், இக்கலியின் வானுட்கு
இதமாஞ் சொன்னேன், இலாவிடிலோ எவ்வெவர்க்கும் பகையு
டனே, புல்லனெனும் நாமம் வாய்ந்து அல்லும் பகலுமே, மன
முழன்று கவலை சூழ்ந்து மதிதாழ்ந்து வினைபோந்து, வையகத்
தில் வாடிடுவீர் சொன்னேன் கண்டீர் காசினியிற் கனவான்கள்
நல்லோர், நண்பர் மெச்சக்கவிபாடும் தாசன், சாம்பமூர்த்தி
முகமாய்ச் சொல்லுங், கலைவாணியருள் கொண்டாற்றேன்
றும், நேசமுட னிவையெலாம் மென்னெஞ்சிற் சுலவி, நன்
ருயாற்கும், நல்லாசி சொன்னேன், பிழை பொருப்பீர் மகிழ்
வுரைப்பீர் எம்பெருமான் திருவடியைப்பெற்று வாழ்வீர். (2)

## மங்களம் (சம்போ சங்கரா).

மங்களம் மெங்கும் புகழ் ஜயகணேசா
மங்களம் சுபமங்களம் (சம்போசங்கரா).
மங்களம் ஸ்ரீரெங்க நாயகி வாசாபேசாங்க
மங்களம் சுப மங்களம்.
மங்கள மாதி லெட்சுமி சமேதா

# ஜமாபந்தி அலங்காரம்.

மங்களம் சுப மங்களம்
மங்கள மகிலாண்ட ஈஸ்வரீ சமேதா
மா ஜெம்புகேஸ்வரா மங்களம்
மங்களம் சுகந்த குந்தள சமேதா
மாதூர் பூதீசா மங்களம் (சம்போசங்கரா).
மங்களம் கலெக்டர் எங்கள் ஸ்ரீ துரைக்கும்
மங்களம் சுப மங்களம்
மங்களம் சிரஸ்தார் ராமலிங்கய்யர்க்கும்
மங்களம் சுப மங்களம்
மங்களம் வைத்தி நாதசாமி அய்யர்க்கும்
மங்களம் சுப மங்களம்
மங்களம் மற்றெல்லா உசூர் கிளர்க்குகட்கும்
மங்களம் சுப மங்களம்
மங்களம் மாசிலா தாசில் சேஷய்யர்க்கும்
மங்களம் சுப மங்களம்
மங்களம் சோம சுந்திரம் எட்கிளர்க்குக்கும்
மங்களம் சுப மங்களம்
மங்களம் மற்றெல்லா இன்ஸ்பெக்டர் யாவர்க்கும்
மங்களம் சுப மங்களம்
மங்களம் மகிழ்வுடன் தாலூக்கா கிளர்க்குக்கும்
மங்களம் சுப மங்களம்
மங்களம் என் நண்பர் சாணமுன்சீபுக்கும்
மங்களம் சுப மங்களம்
மங்களம் படித்தோர்க்கும் மகிழ்ந்திதை கேட்டோர்க்கும்
மங்களம் சுப மங்களம்
மங்களம் இதை அச்சில் பதிப்பித்தோர் யாவர்க்கும்
மங்களம் சுப மங்களம்.
மங்களம் சாம்ப மூர்த்தி ாசர்க்கும்
மங்களம் சுப மங்களம்

181034

---

 